பல்லாவரம் வடக்கு பகுதி 17 வது வட்ட கழகத்தின் மூத்த முன்னோடி மறைந்த கழக செயல் வீரர் பூ.நல்லதம்பி அவர்களின் திருஉருவ பட திறப்பு விழா நிகழ்ச்சி பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவரு மான இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் கோ. ஜானகிராமன் டி. எச். பிரான்சிஸ் பால் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ திருவுருவப்படத்தை திறந்து வைத்து மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி நினைவஞ்சலி உரை நிகழ்த்தினார். அப்பொழுது பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்

வட்டச் செயலாளர் கு.பாபு தலைமையில்

100 'அ' வட்டத்தில் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டம்! நல உதவிகள் வழங்கல் !

நே.சிற்றரசு - எம்.கே. மோகன்- ச.பரமசிவம் - கார்த்திக் மோகன் பங்கேற்பு!

சென்னை, டிச.30

அண்ணாநகர் வடக்குப் பகுதி 100 'அ' வட்டத்தில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ் நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் மாபெரும் பொதுக்கூட்டம் சென்னை சௌராஷ்ட்ரா நகர் டி.பி.சத்திரம் மார்க்கெட் அருகில் இன்று (30.12.2024) மாலை 6 மணிக்கு நடைபெறுகிறது. இதில் வட்ட செயலாளர் கு.பாபு தலைமை வகிக்கிறார்.

அண்ணாநகர் வடக்கு பகுதி செயலாளர் ச.பரமசிவம் முன்னிலை வகிக்கிறார். மாமன்ற உறுப்பினர் வசந்தி பரமசிவம், மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.வேல்முருகன், டி.வின்ஜா ஸ்டாலின், அவைத் தலைவர் டி. ஜான், பி.கீதா, என்.ராஜன், பி.ஜி.சாமிநாதன், சி.ரகுராமன், ஏ.பி.எம். சாம்சன், மு.கதிரவன், பவானி வெங்கடேசன் ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்துகின்றனர்.

மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., தயாநிதி மாறன் எம்.பி., கார்த்திக் மோகன், வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, தலைமைக் கழக பேச்சாளர் சைதை சாதிக், இளம் பேச்சாளர் தினேஷ் ஆகியோர் நல உதவிகளை வழங்கி சிறப்புரை நிகழ்த்துகின்றனர்.

மேலும் இந்நிகழ்வில் மாநில நிர்வாகிகள் எஸ்.சேரன், ஏ.டி.முருகன், கராத்தே என். ஆனந்தன், மாமன்ற உறுப்பினர் ராணி ரவிச்சந்திரன், டாக்டர் நா. சந்திரபாபு, எல். ரஜினிகாந்த், மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ். கலை, ஏ.சங்கீதா, ஜே. எஸ். அகஸ்டின் பாபு, வட்ட செயலாளர்கள் ஆ.ஏகாம்பரம், க. கோவிந்தராஜ், சி.பி. திருமலை, பி. சந்திரசேகர், எம்.ஜி. ரவிக்குமார், பி. ஜெய்சங்கர், அருள் கண்ணன் மாமன்ற உறுப்பினர்கள் மெட்டில்டா கோவிந்தராஜ், புஷ்பலதா ஜெய்சங்கர், பகுதி நிர்வாகிகள் பா.பிரபு, வி. சாய்செல்வம், கே.பி.சுரேந்தர், இரா. இளங்கோவன் , மாவட்ட பிரதிநிதிகள் எஸ். ஜெயகாந்தன், வி.ராஜேந்திரன், ஜே.வீரமணி, கே.பாலாஜி, மா.மோகன், த. குணசேகரன், எம்.வாசு, எஸ். செல்வம், பா.பிரகாஷ், ச. அசோக்குமார், டாக்டர். ஜீவகன், அய்யநாதன், வி.ஆர்.விஜய், யோகேஸ்வரி சுந்தரேசன், என். அரவிந்த் குமார், வி. தேவேந்திரன், ஓகே.ஓகே. குட்டி (எ) சுப்பிரமணி, ஓம்குமார், கே. லோகேஷ், ஆர்.ராதிகா,

என்.ரமேஷ், டி. கார்த்திக்,டி. சம்மந்தா, ஜீவானந்தம் சுவாமிமலை, ஏ. இராஜேந்திரன், டி தயாளரங்கன், ஏ.ஐயப்பன் ஆர். ஜி.ராகவ நாயகம், எம். பாலச்சந்தர். அமானுல்லா, ஏ.மணிகண்டன், எம்.கர்சன் பிரபு, சென் கமல், எஸ்.மகேஸ்வரன், பி. சசிகலா, எஸ். கோபி கிருஷ்ணன், பி.சந்திர கேசவன்,

வி.எம். நாகராஜ், பி.பால்ஜெயகரன், டாக்டர். நக்கீரன், சி. விக்னேஷ், எஸ்.ரமேஷ், செ. அருண்குமார், ஆர்.பொற்கொடி, ஏ.உமாதேவி, வி. வெங்கடேசன், எல்.காஞ்சனா, சரவணன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர். மோ.லிங்கேசன்,பி.சுரேஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தலைமை மற்றும் ஏற்பாட்டில், மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. ஆகியோர் கழக கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கபட்டது. இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., எஸ்.முனுசாமி, சீமன்சேகர், பி.எல்.தாஸ், ஏ.குமாரி, எல்.உதயகுமார், கீதாமுரளி எம்.சி, விமலாகிருஷ்ணமூர்த்தி எம்.சி., அ.ரேவதி எம்.சி. ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஏ.தாஸ், மா.பா.அன்பு, அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், துரை பார்த்திபன், பா.பொன்னுசாமி, எஸ்.மோகன், நந்தனம் நம்பிராஜன், மு.தம்பிதுரை, சி.தசரதன் மரு.ஜெ.அருண், மரு.கலைகதிரவன், ஆ.சந்திரசேகர், நந்தனம் வேதா, மு.சத்யா, கே.மலர், என்.அன்பழகன், சு.வில்லவன், கோ.சு. மணி, செல்விசௌந்தரராஜன், மந்தைவெளி அ.பாபு, யோகேஷ்ரவி, வேலுசம்பந்தம், எம்.ஆறுமுகம், அ.வாசு தேவன், ஜெ.ஜானகிராமன், ஜி.டி.அம்பேத்கார், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மயிலை பகுதி அனைத்து அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் மற்றும் பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் வட்ட நிர்வாகிகள் பாக முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். சா.ராஜீ, மூ.உதயசூரியன், ஸ்டோன் வீ.அருண்குமார், என்.வி.லோகநாதன், தா.வின்சென்ட், ம.ஜெயகோபி, டி. மோகன்ராஜ், பி.ரமேஷ், வி.விஜய்குமார், த.விக்னேஸ்வரன், தா.தீபன், டி.ஜெகதீஷ்பாபு ஆகியோர் நன்றி கூறினார்.

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை! ந.மோ.முரளி வரவேற்புரை! 'ஏன் வேண்டும் தி.மு.க.' எனும் தலைப்பில்

132வது வட்டத்தில் விளக்க உரை - நல உதவிகள் வழங்கல்!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. - சிவாஜி கிருஷ்ணமூர்த்தி - கே.ஏழுமலை - எஸ்.பத்மபிரியா - எஸ்.மோகன் பங்கேற்பு!

சென்னை, டிச.30-

தியாகராயர் நகர் மேற்கு பகுதி, 132-வது வட்டத்தில் திராவிட சூரியன் உதய நாள் - கழக இளைஞரணி செயலாளர் - தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தியாகராயர் நகர் தொகுதியில் அனைத்து வட்டங்களிலும் 'ஏன் வேண்டும் தி.மு.க' எனும் தலைப்பில் விளக்க உரையும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா 2.1.2025 - வியாழக்கிழமை அன்று மாலை 6 மணியளவில் அன்னை அஞ்சுகம் திருமண மண்டபம், கோடம்பாக்கத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு தியாகராயர் நகர் கிழக்கு பகுதி செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். 132-வது வட்டக் கழக செயலாளர் ந.மோ முரளி வரவேற்புரை யாற்றுகிறார். கோடம்பாக்கம் மு. சத்யா, கோ.சு.மணி, கே.எஸ். வெல்டிங் ராஜா, கார்த்திகா, பாஸ்கர் ஆகி யோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு, தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், தியாகராய நகர் மேற்கு பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை, தியாகராய நகர் தொகுதி பார்வையாளர் எஸ்.பத்மபிரியா, மாநில மாணவரணி இணைச் செயலாளர் எஸ்.மோகன் ஆகியோர் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் சா.தேவராசு, டி. மோசஸ், கா.சந்துரு, சா.சங்கர், என்.டி.ஆர்.வேலு, த.ராஜசேகரன், எம்.ராமச்சந்திரன், காலனி பி.வேலு, எஸ்.விஜயன், எஸ்.ரஜினி, சுந்தர், பிலிப் கே. தேவராஜ், ஒய்.எட்வின், கே. ஜலந்தர், மு.பாலகுரு, இ. எஸ்வின்குமார், பா.புகழ், ஆர். பரத், எஸ்.கே.நசீர், எஸ்.மணிகண்டன், நா.மு.தமிழ், து. ஆனந்தராஜ், என்.ஏ.இராமநாதன், ஆர்.வசந்த், என். நோபல், எஸ்.பி.சசி, து. மங்கல்ராஜ், க.பிரசாந்த், மு. உதயநிதி, ஆர்.விக்னேஷ் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்கின்றனர்.

எம்.சேகர், ஏ.கோவிந்தன், எம்.குப்பம்மாள் நன்றி கூறுகின்றனர்.

ஈ.சீனிவாசன் தலைமை! தா.மோகன்குமார் - ச.சேகர் முன்னிலை !

சைதை 168 'அ' வட்டக் கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

வட்ட கழகச் செயலாளர் தா.மோகன்குமார் எம்.சி. அறிவிப்பு

சென்னை, டிச. 30 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தல் படியும் சைதை கிழக்கு பகுதி செயலாளர் 13 வது மண்டல குழு தலைவரு மான இரா.துரைராஜ் வேண்டுகோள் படியும் சைதை கிழக்கு பகுதி 168 'அ' வட்டத்தில் உள்ள வட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் கூட்டம் இன்று (30.12.2024 திங்கட் கிழமை) மாலை 6.00 மணிக்கு சென்னை 32 ஈக்காட்டுத் தாங்கல் காமாட்சி அம்மன் தெருவில் உள்ள மண்டபத்தில் வைத்து வட்ட அவைத் தலைவர் ஈ.சீனிவாசன் தலைமையில் மாமன்ற உறுப்பினர் வட்ட கழக செயலாளர் தா.மோகன்குமார் எம்.சி, மாவட்ட பிரதிநிதி ச.சேகர் முன்னிலையில் த. பாண்டியன் மீனா பரமானந்தம் ஜி.என்.நாராயணன் கோ. தனசேகரன் என்.மேகநாதன் டி. மனோகரன் ஜி.வெங்கடேசன் லிங்கேஸ்வரன் ஆகியோர் வரவேற்புரையில் நடைபெறுகிறது.

ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தல் படி வருகிற தமிழ் புத்தாண்டு பொங்கல் விழாவை முன்னிட்டு 168 அ வட்டத்தில் உள்ள ரெட்டி தெரு 1 முதல் 3 வரையும் லேபர்காலனி 1 முதல் 11 தெருக்கள் வரையும் அருளாயம்மன் பேட்டை நாகிரெட்டி தோட்டம் ஆலாட்சியம்மன் கோயில் தெரு நெருப்பு மேடு ஜோதித்தோட்டம் ஜோதியம்மாள் நகர் செட்டித் தோட்டம் வி.ஜி.பி.சாலை விநாயகபுரம் பார்சன் காம்ப்ளக்ஸ் ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் வீடுகள் தோறும் வண்ண கோலங்கள் போட்டு புத்தாண்டு பொங்கல் விழாவை சிறப்பாக எதிர் கொள்ளும் வகையில் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது. கொடி பாலா மே. குணா நன்றி கூறுகிறார்.

எனவே நமது 168அ வட்டத்தில் உள்ள மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட மற்றும் பகுதி நிர்வாகிகள், வட்ட கழக முன்னோடிகள், பாக முகவர்கள், மற்றும் பாக பணியாளர்கள், சார்பு மன்ற நிர்வாகிகள், செயல் வீரர்கள், கழக மகளீர்கள் நிர்வாகிகள், அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டு வட்ட கழக செயலாளர் தா.மோகன்குமார் எம்.சி கேட்டுக் கொண்டுள்ளார்

தாம்பரம் தொகுதிக்கு உள்பட்ட தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3, 34 வது வார்டு சிட்லபாக்கம் பிரதான சாலையில் நெடுஞ்சாலை துறை சார்பாக வடிநீர் கால்வாய் அமைக்கும் பணியை எஸ்.ஆர்..ராஜா எம். எல்.ஏ. பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மண்டல தலைவர் ஜெயபிரதீப் சந்திரன், பகுதி செயலாளர் சுரேஷ் மாமன்ற உறுப்பினர்கள் ஜெகன், ராஜா மற்றும் வட்ட கழக செயலாளர் தேவேந்திரன், சதீஷ் மற்றும் கழக நிர்வாகிகள் சிட்லபாக்கம் மனோகரன், விஜயகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் அரசு நெடுஞ்சாலை துறை அதிகாரிகள், நலச்சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்...

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க

மாநில செய்தித் தொடர்பாளராக அ.ரகமத்துல்லா நியமனம்!

மாநில தலைவர் கு.தியாகராஜன் அறிவிப்பு!

புதுக்கோட்டை, டிச. 29-

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் கு.தியாகராஜன்புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அக்கச்சிப் பட்டியில் பணிபுரிந்து வரும் பட்டதாரி அறிவியல் ஆசிரியர் அ.ரகமதுல்லாவை தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில செய்தி தொடர்பாளராக நியமித்து அறிவிப்பை வெளியிட்டார்.

மதுரை காமராஜர் பல்கலைக் கழக தொல்காப்பியர் அரங்கில் கடந்த ஞாயிறு அன்று தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மதுரை மாவட்ட பொதுக்குழுக் கூட்டம் மாநில அமைப்பு செயலாளர் செ.ரமேஷ் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாநில பொறுப்பாளர்கள் மற்றும் அருகாமை மாவட்டமான புதுக்கோட்டை, திருச்சி, சிவகங்கை, ராமநாதபுரம், தேனி மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதில் சங்க பணிகளில் சிறப்பாக செயலாற்றி வரும் புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், அக்கச்சிப் பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பட்டதாரி அறிவியல் ஆசிரியரும். தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் புதுக்கோட்டை மாவட்ட செய்தித் தொடர்பாளராகவும் அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றி வரும் ரகமதுல்லா வை அவரின் பணிகளை பாராட்டி அங்கீகரிக்கும் விதமாக தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில செய்தி தொடர்பாளராக பணியாற்றுவார் என்று அறிவித்தார்.

'மகா' டிசைன்ஸ் மகாராஜனின் தந்தை

ஆ.சச்சிதானந்தம் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி! விழுப்புரத்தில் இறுதி ஊர்வலம்!

சென்னை, டிச. 30-

கழகத்தினரின் விளம்பரங்களை வடிவமைத்திடும் இராயப்பேட்டையில் உள்ள 'மகா' டிசைன்ஸ் மகாராஜனின் தந்தை ஆ.சச்சிதானந்தம் (வயது 94) 29.12.2024 ஞாயிறு காலை 7.10 மணியளவில் விழுப்புரத்தில் உள்ள அவரது இல்லத்தில், இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைவு தகவல் அறிந்து கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (30.12.2024-திங்கள்) காலை 11 மணியளவில் அவரது சொந்த ஊரான விழுப்புரம், கீழ் பெரும்பாக்கம் எண்.39, கண்ணகித் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு கீழ் பெரும்பாக்கம் இடுகாட்டில் இறுதிச்சடங்குகள் நடைபெறுகின்றன.

மறைந்த சச்சிதானந்தம் அவர்களுக்கு மகாராஜன் உள்பட 3 மகன்களும் ஒரு மகளும் உள்ளனர்.

தென்காசி தெற்கு மாவட்டக் கழக

தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் நியமனம்!

DMK IT WING

தகவல் தொழில் நுட்ப அணிச் செயலாளர் - அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அறிவிப்பு!

தென்காசி தெற்கு மாவட்ட திமுக தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட, மாவட்ட துணை மற்றும் தொகுதி நிர்வாகிகள் பின்வருமாறு அறிவிக்கப்படுகிறார்கள். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து செயல்படுவார்கள்

மாவட்ட அமைப்பாளர்

சி.சங்கர் @ அழகுதமிழ், 5/266,2, கே. ஆர். காலனி, தென்காசி -327 811 செல் : 9360212101

மாவட்ட துணை அமைப்பாளர்கள்

1. **ஏ.கலாநிதி,** க/பெ. ஆறுமுகச்சாமி, 4/201, பள்ளிக்கூடத் தெரு, மீனாட்சிபுரம், செங்கோட்டை, செல் : 6374389882

2. **ர.சேக் சபீக் அலி,** 93, மதரசா தெரு, வடகரை 627 812. செல் : 9025092042.

3. **சண்முகமணிகண்டன்,** 11/46, சக்தி நகர், தென்காசி, செல் : 9952140245.

4. **எஸ்.சுதன்ராஜா,** த/பெ. சு.சங்கரபாண்டியன், 11/43(3) பாரதிநகர், சுரண்டை 627-859, செல் : 9894312602.

5. **இ.ரா. சிங்கதுரை தென்பாண்டி,** 11/86 பி, தெற்கு தெரு, வெள்ளிகுளம், பொட்டல் புதூர், தென்காசி 627423.

சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள்

கடையநல்லூர் தொகுதி

1. **கே. கவிக்குயில்,** 3/75, 2, கருணா நிதி தெரு, ஏ.ஆர்.எஸ். நகர், ஊர்மேலழகியான் -627 852, செல் : 63837 62507 / 8056807158.

2. **முத்துக்குமார் வி.எஸ்.வி. (களபணி எச்.ஆர்.),** 35/பெரிய தெரு, முத்து கிருஷ்ணபுரம், கடையநல்லூர், செல் : 9940773008.

தென்காசி தொகுதி

பத்திரகாளி, க/பெ.பிரபு, 3-4-59 நடுத் தெரு, கீழச்சுரண்டை, செல் : 9659506934.

ஆலங்குளம் தொகுதி

1. **பொ.தன்ஷிகா,** த/பெ.பொன்மாணிக்கம், 5/191, புதுப்பட்டி, ஆலங்குளம்-627 851, செல் : 9944839783.

2. **R. மகேஷ் பாண்டியன (களபணி எச்.ஆர்.),** 2/87 அம்மன் கோவில் தெரு, நெட்டூர், செல் : 8778339172

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா
செயலாளர்,
தகவல் தொழில்நுட்ப அணி தி.மு.க.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்ட தி.மு.க. சார்பில் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் மாபெரும் பொதுக்கூட்டம் 101 வது வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமையில் 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 (அ) வட்டச் செயலாளர் சி.பி.திருமலை ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இப்பொதுக்கூட்டத்தில் பேச்சாளர் நாஞ்சில் சம்பத், இளம் பேச்சாளர் கீர்த்தனா ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், வடக்கு பகுதிச் செயலாளர் ச.பரமசிவம் ஆகியோர் நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்கினார்கள். இதில் ஏ.டி.முருகன், ராணி ரவிச்சந்திரன், சந்திரபாபு, ஆர். என்.துரை, ஆ.ஏகாம்பரம், கு.பாபு, பி.சந்திரசேகர், பி.ஜெய்சங்கர், அருள் கண்ணன் மற்றும் பா.பிரபு, கே.பி. சுரேந்தர் மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தி.மு.க. சட்டத்துறையின் சென்னை மண்டலத்திற்குட்பட்ட சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணியின் அமைப்பாளர் வே.தேவேந்திரன் ஏற்பாட்டில் வழக்கறிஞர்கள் ஆலோசனைக் கூட்டம் சென்னை மேற்கு மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடந்தது. இக்கூட்டத்தில் சட்டத்துறை இணை செயலாளர் ஜெ.பச்சையப்பன், துணை செயலாளர் கே.சந்துரு, பெ.ரகு மற்றும் தலைமை கழக வழக்கறிஞர் கே.ஜெ.சரவணன் மாவட்ட தலைவர் சியாமளா, துணை தலைவர் பாலசந்தர், துணை அமைப்பாளர்கள் கமலகண்ணன் ,ரகுராமன், பாபு, மதன் உள்ளிட்ட ஏராளமான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வி.எம்.ஆர். சபாபதி

டிசம்பர் 30 (2009)

சென்னை, ஆயிரம்விளக்கு பகுதிக் கழக துணைச் செயலாளர், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை துணைத் தலைவர், மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத் தலைவராக தொடர்ந்து 35 ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

தொழிலாளர்களுக்கு பல உரிமைகளை பெற்றுத் தந்து, போக்குவரத்துத் தொழிலாளர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் கழகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாக தமிழகம் முழுவதும் அவரோடு சுற்றுப்பயணம் மேற்கொண்டு கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

'தன்மான முரசமாக, தகுதிமிக்க தொழிலாளர் சங்கமாக முழங்கிய என்தோழன், முன்னணிக் கழகத் தொண்டன், முடிவெய்திய செய்தி கேட்டு முடிவில்லா சோகத்தில் ஆழ்ந்ததே பாட்டாளி வர்க்கம்! தொழிலாளர் துணைவன் மறைந்தாரே!" என தலைவர் கலைஞர் அவர்கள், தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்
தி.மு.க.